மாண்புமிகு திரு. செ. மாதவன் : சட்டத்திற்குப் புறம்பான நடவடிக்கைகளை யார் செய்தாலும் அதைப் பற்றி போலீசார் கண்காணித்துக் கொள்வார்கள்.

திரு. என். கே. பழனிசாமி : கனம் அமைச்சர் அவர்கள் உணவுக் கொள்கை கன்ஸ்யூமர்ஸ் கோவாப்ரேடிவ் சொஸைடிகளை ஏற்படுத்துவது தான் என்று சொன்னார்கள். அப்படியானால் சர்க்கார் எவ்வாறு கொள்முதல் செய்யப் போகிறார்கள், எவ்வாறு விநியோகம் செய்யப் போகிறார்கள், இருக்கக்கூடிய சொஸைடிகளிலேயே விநியோகம் செய்யப்போகிறார்களா அல்லது புதிதாக சொஸைடிகள் ஏற்படுத்திச் செயல்படப் போகிறார்களா ?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : கன்ஸ்யூமர்ஸ் கவுன்சில் அமைச்சரைச் சந்தித்ததைப் பற்றிய கேள்வி இது. மாண்புமிகு உறுப்பினர் ப்ரொட்யூஸர்ஸ் கோவாப்ரேடிவ் சொஸைடிஸ் பற்றி கேள்வி கேட்கிறார்கள் என்று நினைக்கிறேன். உற்பத்தியாளர்களுடைய ஒத்துழைப்பு கிடைக்குமானால் அதைப்பற்றிப் பரிசீலிக்கலாம்.

Sale of spare parts for buses through Co-operatives.

*484 *Q.*—THIRU N. K. PALANISAMY: **Will the Hon. the Minister for Food and Co-operation be pleased to state—**

(a) whether there is any proposal under the consideration of the Government to arrange for the sale of spare parts and accessories for buses at fair prices through Co-operatives ; and

(*b*) if so, the details thereof ?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : (அ) இல்லை.

(இ) இவ்வினா எழவில்லை.

திரு. என். கே. பழனிசாமி : சார், கோயம்புத்தூர் சிந்தாமணி மார்க்கெட்டிலே இம்மாதிரி ஸ்பேர் பார்ட்ஸ் கொடுக்கிறார்கள். வெளியிலே அவற்றின் விலை அதிகமாக இருப்பதால் ஆங்காங்கு உள்ள சூப்பர் மார்க்கெட்டுகளில் இவற்றை விற்க அரசு ஏற்பாடு செய்யுமா ?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : இப்போதே 7 இடங்களில் இப்படிப்பட்ட கூட்டுறவு அமைப்புகள் இருக்கின்றன. இதற்கென்று தனியாகவும் மோட்டார் உதிரிப் பாகங்கள் பண்டகசாலை என்ற முறையிலே திருச்சி, சேலம், திருச்செங்கோடு, வேலூர் போன்ற இடங்களிலே அமைக்கப்பட்டிருக்கின்றன. அவர்கள் சொன்னதைப்போல் சிந்தாமணி கூட்டுறவு அங்காடியிலும் சேலம் கூட்டுறவு சிறப்பு அங்காடியிலும் தனிப் பிரிவுகள் இதை விற்பனை செய்து வருகின்றன.

1975 மார்ச் 29]

திரு. என். மருதாசலம் : சூப்பர் மார்க்கெட்டிலே வெளியிலே விற்கப் படுகின்ற விலையைவிட அதிகமான விலைக்கு விற்கப்படுகிறது. அங்கே குறைந்த விலைக்கு விற்பதற்கு அரசாங்கம் ஏற்பாடு செய்யுமா ?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : இப்படிப் பொதுவான குற்றச் சாட்டைச் சொல்லக் கூடாது. சூப்பர் மார்க்கெட்டுகளிலே, சிறப்பு அங்காடி களிலே குறைந்த விலையிலே விற்கப்படுவதால்தான் மக்கள் நம்பி அதை ஊக்குவிக்கிறார்கள். ஏதாவது ஒரு சில பொருள்களின் விலை ஏறியிருக்குமானால் அதைக் குறைக்க முயற்சிக்கலாம். சிறப்பு அங்காடிகள் சிறப்பாகச் செயல்படுகின்றன என்பதுதான் மக்களுடைய நம்பிக்கை.

Key Village Scheme.

*485 Q.—Thiru N. K. PALANISAMY: Will the Hon. the Minister for Commercial Taxes be pleased to state :

(a) whether there is any proposal under the consideration of the Government to revive the Key Village Scheme ; and

(b) if so, the details thereof ?

மாண்புமிகு திரு. ஓ.பி. இராமன் : (அ) ஆம்.

(இ) 1973-ம் ஆண்டில் மதுரை மாவட்டத்தில் பழனி வட்டத்தில் கேந்திர கிராம நிலையங்கள் ஏற்படுத்தப்பட்டன. 1974–75 ஆம் ஆண்டில் திருநெல்வேலி மாவட்டத்தில் 8 கேந்திர கிராம நிலையங்களை ஏற்படுத்துவது அரசின் பரிசீலனையில் உள்ளது. 1975-76 ஆம் ஆண்டில் 8 கேந்திர கிராம நிலையங்களை ஏற்படுத்த நிதிக் குழு ஒப்புதல் அளித்துள்ளது.

திரு. என். கே. பழனிசாமி : சார், கீ வில்லேஜ் திட்டத்தில் ஏற்கனவே இருந்த திட்டப்படி அமல் நடத்தப்படவில்லை. இப்போது அப்படிப்பட்ட திட்டம் இல்லாமல் செமிநேஷன் மட்டுந்தான் இருக்கிறது. பழையபடியும் அந்தத் திட்டத்தை கொண்டுவந்து பால் உற்பத்தியை அதிகரிக்கச் செய்ய அரசு முன்வருமா ?

மாண்புமிகு திரு. ஓ.பி. இராமன் : ரீ-ஆர்கனேஸ் செய்யும்போது புதிதாக இந்தத் திட்டத்தை 40 இடங்களில் ஏற்படுத்த வேண்டுமென்று குறிப்பு இருக்கிறது. முதல் கட்டமாக மதுரை மாவட்டத்திலே 3 இடங்களிலே ஏற்படுத்தினோம். திருநெல்வேலி மாவட்டத்திலே 8 இடங்களில் ஏற்படுத்த முடிவு செய்யப்பட்டிருக்கிறது. இந்த ஆண்டு மேலும் 8 இடங்களுக்கு விஸ்தரிக்கப்படக் கூடிய நிலைமை இருக்கிறது. மீண்டும் 40 இடங்களில் இதை விஸ்தரித்து மாண்புமிகு உறுப்பினர் சொன்ன யோசனையைப் பரிசீலிக்கலாம்.